சுபமஸ்து.

தமிழகம்.

வால்யூம் 2. } 1906-௵ ஏப்ரல்௴ { நம்பர் 4.

சாஸ்திரப்பொருண்மாலை.

6. தாம்ரபாத்திரங்கள். *

வெகுநாளாக நாம் பொய்யாசாரங்கள் என்று நினைத்திருந்த விஷயங்கள் இக்காலங்களில் நல்வாழ்விற்கே இன்றியமையாதவைகள் என்று ஒன்றொன்றாய் நிரூபிக்கப்படுகின்றன. நமது முன்னோர்கள் தெய்வாராதனை முதலான சற்கருமங்கள் செய்யும்போது அவசியம் தாம்ரபாத்திரங்களையே உபயோகிக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். தென்னிந்தியாவில் இப்போதுங்கூட ஜனங்கள் காவேரிக்கு ஸ்நானஞ்செய்யப்போகும்போது செப்புச்செம்புகளைக் கொண்டுபோகிறார்கள். சிலர் தாம்ரபாத்திரங்களில் அன்றி வேறுபாத்திரங்களில் ஜலபானஞ்செய்வதில்லை. இப்படியிருக்க, நாமோ சிறிது ஆங்கிலம் கற்றுவிட்ட மமதையினால் செருக்குண்டு "இவையென்ன பொய்யாசாரங்கள்," என்

* இந்துகாலேஜ் பத்திரிகை, வால்யூம் 5, பக்கம் 67.

கின்றோம். சுத்தம் செய்தபிறகு சிறிதுகாலத்திற்கெல்லாம் காற்றிலாடிய காரணத்தால் நிறம் மங்கிக் கறையுண்டாகிறதென்று நினைத்து அதை நாம் வெறுக்கிறோம்.

ஆயினும், கவனிக்க! 1904-ம் வருஷத்திய ரிவியுஆவ் ரிவியூஸ் என்ற ஆங்கில பத்திரிகையின் டிசம்பர்மீ சஞ்சிகை தாம்ரம் ஜலத்தைச் சுத்தப்படுத்துகிறதென்று தெரிவிக்கிறது. இது தற்காலத்து சாஸ்திரஞ்ஞர்கள் புதிதாகக் கண்டுபிடித்த விஷயங்களிலொன்று. "விஷமுள்ள நுண்ணுயிர் (microbes) களைத் தாம்ரம் கொல்லுகின்றது. அஸ்திஜ்வரம், விஷபேதி முதலான பல நோய்களுக்குத் தாம்ரம் முதற்றரமான மாற்றாக விருக்கிறது."

பருகு நீர் நிறைந்துள்ள ஊருணிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதில் ஏராளமான பணஞ்செலவிடுவதோடு நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுளது. அது யாதெனில், பத்துலக்ஷம் காலன் (இரண்டரைப்படி) ஜலத்தைப் பரிசுத்தப் படுத்த ஒரு ரூபா எட்டணா விலையுள்ள துருசே போதுமென்று சாஸ்திரஞ்ஞர்கள் கூறுகின்றார்கள் என்பதே.

பின்வருவதும் ரிவியூ ஆவ் ரிவியூஸ் என்ற பத்திரிகையிலிருந்தே எடுத்தெழுதப்பட்டது:—"கண்ணிற்குப் புலப்படாத நுண்ணிய உயிர்கள் அற்பமான தாம்ரவாடைக்கும் பயந்து சுருங்குகின்றன என்று பல தடவைகளில் ருசுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆதலின் டாக்டர் மூர் (Do. Moore) நமது நகரங்களில் ஜனங்கள் பருகும் நீரில் நிறைந்துள்ள அஸ்திஜ்வரம் விஷபேதி முதலான நோய்களை வளர்க்கும் நுண்ணிய பரமாணுச் சிற்றுயிர்களை நசிப்பிக்க இவ்விதமான தாம்ரத்தையே பிரயோகித்தல் நலமென்றார்....................இரசாயனச் சோதனைக்கு உபயோகிக்கும் கண்ணாடிக்குழல்களில் நீரை எடுத்தும் பெரிய தடாகங்களிலுள்ள நீரிலும் பலவிதமான சோதனைகள் செய்தார்கள். அஸ்திஜ்வரம் விஷபேதிமுதலான நோய்களுக்குத் தாயாகும் பரமாணுச் சிற்றுயிர்கள் கோடானுகோடியாய்க் குடிகொண்ட ஜலத்தை நாலு ஐந்து மணிகளில் சுத்தஞ்செய்துவிடலாம். எப்படியென்றால் அந்த ஜலத்தை முதுவேனிற்காலத்தில் குளத்து நீர் எவ்வளவு வெதுவெதுப்பாய் இருக்கிறதோ அவ்வளவு சூடேறச் செய்து, லக்ஷம் பங்கு ஜலத்துக்கு ஒருபங்கு தாம்ரமாகச்

சேர்த்த திராவகத்தை அந்த அசுத்தஜலத்திற் கலந்தால் பரமாணுச் சிற்றுயிர்கள் மரித்துப்போகின்றன.. இந்தியானுபோலீஸ் என்ற நகரத்தில் கடைசியாக வாந்திபேதி பரவியகாலத்தில், அந்நகராதிகாரிகள் அந்நகர வீதிகளையும் வீடுகளையும் துருசு கரைத்த நீரால் மெழுகி அந்நோயைத் துடைத்தனர். தங்க நாணயங்களிலும் வெள்ளிநாணயங்களிலும் நோய்ப்பரமாணுச் சிற்றுயிர்கள் மல்குகின்றன. தாம்ரநாணயங்களைக் கண்டமாத்திரத்தில் விஷபேதிப் பரமாணுச் சிற்றுயிர்கள் விலகுகின்றன ....நாற்றமெடுக்கின்ற குப்பைகள் சூழ்ந்திருந்தும் சீனர்கள் விஷபேதியால் மாள்வதில்லை! ஏனென்றால் அவர்கள் தாங்கள் குடிக்கும் நீரைத் தாம்ரத்தொட்டிகளிலேயே வைத்திருக்கின்றனர்.”

நமது குக்கிராமத்து ஜனங்கள் தமது பிள்ளைகள் இடுப்பில் அரைஞ்ஞாணிற் கோத்து ஒரு முக்கால்துட்டு நாணயத்தையாகிலும் நாய்க்காசையாகிலும் இரக்ஷாபந்தனமாகத் தொங்கவிட்டு வைப்பது வழக்கம். இது அறியாமையோ அறிந்தமையோ கண்டுகொள்க.

திருநெல்வேலி ஜில்லாவில் ஒடுகின்ற தாம்ரவர்ணி நதியின் ஜலத்தைப்பருகும் ஜனங்கள் விஷபேதிக்குள்ளாவதில்லையாம்! இதனைக் கேட்டறிக.

நற்காலத்து நாகரீகமே சிறந்ததென்று கடைப்பிடித்திருக்கும் எம்போலிய சிற்றறிவினர்க்கு நான் கூறும் வாய்மொழி ஒன்றுள்ளது. எது பொய்யாசாரம்? எது மெய்யாசாரம்?— என்று நாம் இப்போது நமக்குள்ள முற்றுறாத சிற்றறிவைக் கொண்டு காண்பது அரிதாயிருக்கின்றது. நாம் பொய்யாசாரம் என்று நினைத்தவைகள் இப்போது சாஸ்திரங்களின் ஆராய்ச்சிகளால் மெய்யாசாரங்களென்றே துணியப்படுகின்றன. ஆதலின் நாம் ஆராயாமல் ஒன்றையும் பொய்யாசாரமென்று கூறலாகாது.

7. எனுமல் பாத்திரங்கள்.

எந்தவிஷயமும் நமது மேனாட்டார்கள் எடுத்துக்கூறினால் நமக்குப் பத்தியமே. நம்முன்னோர்களே நமக்குக் கூறினால் அவ்வார்த்தை அவ்வளவு மதிப்புக்கொள்ளுவதில்லை. எனுமல் பாத்திரங்கள் கூடாதென்று மிஸ்டர் ராபர்ட் காஸ்டர் கூறுகின்

ழர். ஆகாரதிகள் செய்வதற்கும் பானங்கள் காய்ச்சுவதற்கும் ஒவ்வொரு வீட்டிலும் நாம் இப்போது எனுமல் பாத்திரங்களையே உபயோகப்படுத்துகிறோம். பெண்டுகளுஞ் சரி புருஷர்களுஞ் சரி, எனுமல் பாத்திரத்தின் தவள நிறத்தைக்கண்டு மயங்கி அவைகளையே வாங்கத் தலைப்பட்டனர். இன்னங் கொஞ்ச காலத்தில் சிரார்த்தாதிகளுக்குக் கூட எனுமல் பாத்திரங்களையே உபயோகிப்பார்கள் போலும்! இந்த ஆதுரத்தினுல் ஜனங்களுக்குச் சில கேடுகள் சம்பவித்து இருக்கின்றன. இந்தப்பாத்திரங்கள் உள்ளே தடவிய வெண்சுதை நிலைநிற்குமளவுதான் உண்ணவும் பருகவும் உபயோகமாகும். வெண்சுதை கழன்று சிறிதேனும் விழுந்தால் பாத்திரம் பிரயோஜனப்படுவதில்லை. "எனுமல் பாத்திரங்களில் உள்ள அணுக்கள் உணவுப்பதார்த்தங்களோடு சேருகிறதினுல், தேக அசௌக்கியத்திற்குக் காரணமாகிறதென்று வைத்திய விற்பன்னர்கள் அபிப்பிராயப்படுகிறுர்கள்," என்று கூறப்பட்டிருக்கிறது. இதனை நம்மவர்கள் கவனித்து எனுமல் பாத்திரங்களை வாங்கா தொழிவார்களாக!

8. சிகிச்சையினுங் காப்பே விசேஷம்.*

ஜப்பானியர்கள் தமது சாஸ்திராராய்ச்சியின் பயனுல் யுத்தகளத்தில் நோயணுகா வண்ணம் சில மார்க்கங்களைத் தேடுகின்றனர். யுத்தகளத்தில் முன்னணியிலும் பின்னணியிலும் வைத்தியர்கள் உள்ளனராம். முதன்முதற் செல்லும் உளவாளர் படைத்திரையிலும் வைத்தியனொருவன் தன் பூதக்கண்ணுடியோடும் இரசாயனப் பொருள்களோடும் செல்கின்றனன். அங்கங்கே மார்க்கத்திலுள்ள கிணறுகளின் ஜலங்களைப் பரிசோதித்து "இது நல்லது, இது கெட்டது," என்று எழுதியெழுதி யொட்டிச்செல்கின்றுன். பின்னுல் வரும் படையோ அசுத்த நீரை விலக்கி "நல்லது" என்றெழுதிய சீட்டுடைய நீரையே பருகிச்செல்லும். உளவாளர் ஓர் பட்டணம் சேர்ந்தக்கால், உடனே வைத்தியன் அந்நகரத்துச் சுகாதார நிலைகளைச் செம்மையாய்ப் பரிசோதித்து அந்நகரத்தில் ஒட்டுவாரொட்டியும் தொத்துநோயும் பரவியிருந்தால் உளவாளர் தங்கிய பாடிவீட்டைச் சுற்றி ஓர் இரக்ஷை கட்டிவிடுவான். இரைகொள்ளப் போன படையுடன் மற்றொரு வைத்தியன் போவான். ஆகாரம்

---

* இந்துகாலேஜ் பத்திரிகை, வால்யூம் 5, பக்கம் 74.

சேர்த்துத் தரும் உத்தியோகஸ்தர்களுடன் மற்றொருவன் இருப்பான். மேம்படை வருமுன்னர் ஆகாராதிகளின் மாதிரிகளைப் பரிசோதித்து நாட்டாளர் விற்கும் பழவகை கரிவகை முதலான தின்பண்டங்களை ஆராய்ந்துவைப்பார்கள். ஆகாரத்தில் அசுசியேற்பட்டாலும், பழம் அழுகிப்போனாலும், தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்கவேண்டியிருந்தாலும், படையாளர் இன்னின்னவிதம் நடந்துகொள்ளவேண்டுமென்று கண்ணிற்குப் புலனான தகுந்த இடங்களில் நோட்டீஸ் போட்டுவிடுவார்கள்.

பாடிவீடுகள்தோறும் நுழைந்து வைத்தியர்கள் விசாரணை செய்து வீரர்களில் தேகசௌக்கியத்திற்கான சில விதிகளை நியமிப்பார்கள். சமைப்பதெப்படி யென்றும், ஸ்நானஞ்செய்வதெப்படியென்றும், நகக்கண்களை அழுக்கும் அவ்வழுக்கோடு கலந்த நோய்க்கு மூலாதாரமான பரமாணுச்சிற்றுயிர்களும் நீங்கும்படி எப்படிக் கழுவுவதென்றும் கற்றுவைப்பார்கள். இவ்வாறு வைத்தியர்கள் விதித்த விதிகளையும் ஒருவாறும் பிழைபடாமல் காப்பது வீரர்களின் கடமைகளில் ஒன்றாகுமாம். ஆதலினாற்றான் சற்று காலத்திற்கு முன்னே நடந்த ரஷ்ஷோ ஜப்பானியர் சண்டையில், ஜப்பானியர் பக்கத்தில் ஆஸ்பத்திரிக்குச் சென்றவர் மிகவும் சிலர். அவர் சேனையிலும் "வியாதி" என்னும் பகைவன் நுழைந்திலன்.

சீமர்தான்காலத்தில் நாம் நமது வைத்தியர்களைக்கொண்டு வியாதிகளுக்குக் காப்பான காரியங்களைத் தேடிச் செய்துகொள்ளுவோமேயானால், மானிடர்களின் பிணியும் நீங்கிச் சுகம் உண்டாகும். ஒவ்வொரு முனிசிபாலிடியும் பல வைத்தியர்களை நியமித்து நகரத்தைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அவ்வைத்தியர்களும் ஊரெல்லாம் சென்று ஜனங்களுக்குச் சுகாதாரவிதிகளைப் போதிக்கவேண்டும். அப்படிச்செய்தால் சீக்கிரத்தில் வாதமும் அஜீர்ணமும் ஜலதோஷமும் ஜ்வரமும் அனேகமாய் விலகிவிடும். ஜனங்களும் இவ்வளவு கஷ்டப்படமாட்டார்கள்.

(இன்னும் வரும்.)

பத்திராசிரியர்.

சரீரதத்துவவிளக்கம்.

அத்தியாயம்-1. எலும்புக்கூடு.

(முதற்றொகுதி, 151-ம்-பக்கத் தொடர்ச்சி)

ii. விலாவெலும்பு iii. மார்பெலும்பு.



(படம்—6. விலாவெலும்பும் மார்பெலும்பும்) *a*, முதுகுவர்க்கவெலும்புகள். *b*, மார்பெலும்பு. 1, 2, 7, 8, 9, 10, விலாவெலும்புகள். 11, 12, நீச்செலும்புகள்.

விலாவெலும்பு பக்கத்திற்குப்பன்னிரண்டு. முதுகெலும்பிலுள்ள பன்னிரண்டு முள்ளெலும்புகளோடும் வலம் இடம் என்ற இருபுறத்திலும் பக்கத்திற்கொன்றாக விலாவெலும்புகள் பொருந்தும். ஒவ்வொருவிலாவெலும்பும் இரண்டிடத்தில் முதுகெலும்போடு சேர்ந்திருக்கும்: அதாவது, பக்கமுள்ளோடும் முதுகெலும்பின் உடலோடும். இவற்றில் பெரும்பான்மை தாம் கட்டுண்டிருக்கும் முதுகெலும்பின் மேலெலும்பின் உடலோடு சேர்ந்திருக்கும். இதனால் மேலும் கீழுமாய் அசைவதற்குக்கூடும். முதுகுத்தண்டைவிட்டு முன்புறம் வரும்பொழுது நேராய் வராமல் சற்றுக்கீழேதாழ்ந்துவருகின்றன. மேலிருந்து முதல்பத்து

விலாக்களும் மார்பெலும்போடு சேர்ந்திருக்கின்றன. ஆனால், மார்பெலும்போடு சேரும்பாகம் எலும்பால் ஆக்கப்பட்டதல்ல. அது முருந்தால் ஆனது. இப்பாகங்களுக்குவிலாக்குருத்துஎன்றுபேர். முதல் ஏழெலும்பும் தனித்தனியே மார்பெலும்பைப்போய் அணுகின்றன. ஆனால், 8, 9, 10, எலும்புகள் முதலில் ஒன்றோடொன்றுசேர்ந்து பின்பு மார்பெலும்பை அடைகின்றன. ஆகவே அவை நேரே மார்பெலும்பைப்போய்ச்சேருவதில்லை. 11, 12, விலாக்கள் குட்டையாயும் மார்பெலும்போடுசேராதனவாயுமிருப்பதால் நீச்செலும்பு என்று பெயரிடப்பட்டிருக்கின்றன.

மார்பெலும்பு: இது சற்றேறக்குறைய 6 அங்குலநீளமும் 2½ அங்குல அகலமுமாய் அமைந்து கீழ்ப்புறம் குறுகியிருக்கும். பார்வைக்கு ஒரு குத்துக்கத்தியைப்போலிருக்கும். இருபக்கங்களிலிருந்தும் முதல் ஏழுவிலாக்களின் முருந்தும் இதனுடன் வந்து பொருந்தும். ஆனாலும் ஏழாவது ஜோடிவிலாக்கள் இதை எவ்விடத்தில்வந்து சேருகின்றனவோ அவ்விடத்திற்குங் கீழே இது சற்று நீண்டிருக்கிறது. மேற்புறத்தில் கழுத்தெலும்புகள் வந்து கூடுகின்றன.

iv. கழுத்து வளையம்:

அதாவது நெஞ்செலும்புக்கூட்டம். (படம் 1. பார்க்க) இது முற்றுப்பெற்றவளையமன்று. இதன் மேற்புறத்தில் மேற்கையெலும்புகள் பொருந்துகின்றன. இந்தவளையத்தில் பக்கத்திற்கு இரண்டு எலும்புகள் உண்டு: கழுத்துப்பட்டை ஒன்று, தோளெலும்பு ஒன்று. கழுத்துப்பட்டைஎலும்பு மார்பினின்றும் புறப்பட்டுத்தோளெலும்பின்முண்டிற்போய்ப்பொருந்துகின்றது. இதன் கீழேதான் மேற்கையெலும்பானது தோளோடு பூட்டப்பட்டிருக்கிறது. தோளெலும்பானது பின்புறத்தில் முக்கோணமானமட்டமாகவும் மேற்புறத்தில் தோட்பூட்டில் கனமாய் உருண்டுமிருக்கிறது. மேற்கையின் பின்புறத்திலுள்ள பெருந்தசைகளைத்தாங்கப் பொருத்தங்கள் இங்கே உண்டு. தோட்பூட்டில் கழுத்துப்பட்டையெலும்போடுமாத்திரம் இது பொருந்தியுள்ளது. மற்றவிதமாய் இந்தத்தோளெலும்புக்கு முதுகெலும்போடு ஒருசம்பந்தமுமில்லை. ஆகையால் இது சுலபமாய் எல்லாப்பக்கங்களிலும் அசையக்கூடியது.

v. அனுமிகைவட்டம்:

அதாவது அடிவயிற்றுவளையம். (படம் 1, படம் 2, பார்க்க) இது பின்புறத்து ஆப்பெலும்பிலிருந்து வளைந்துவருவது. இதன் பின்புறத்தின் அடிப்பக்கத்திலிருந்துதான் துடையெலும்புகள் கிளம்புகின்றன. இவ்வட்டத்தை அமைக்கும் எலும்புகள் மூன்று. பின்புறநடுவில் ஆப்பெலும்பு. அதன் இருபக்கங்களிலிருந்தும் புறப்பட்டு வளைந்து அடிவயிற்றின் முன்புறத்தில் மார்பெலும்புக்கு நேரொழுங்காய்வந்து பொருந்தும் எலும்புகள் இரண்டு. ஆக, மூன்று. பின்கூறப்பட்ட இவ்விருவெலும்புகளும் குண்டியெலும்புகள் என்று பெயர்கொண்டன. இவ்விரண்டும் ஆப்பெலும்போடுசேர்ந்துபொருந்துவதால் இவைகளுக்கிடையே இந்த ஆப்பெலும்பானது ஒருபொறுப்புக்கல்லைப்போல் வன்மையுடன் நிற்கின்றது. குண்டியெலும்பு எங்கும் சமகனமுள்ளதல்ல. ஒழுங்கற்றது. பின் அடிப்புறத்திலிருந்து துடையெலும்புகள் புறப்படும் இடம் மிகவும் குழிவானதும் கனமுள்ளதுமாயிருக்கிறது. அடிவயிற்றின் முன்சுவர்போல வந்திருக்கும்பாகம் சப்பட்டையாயும் அகன்றும் இருக்கிறது. இந்தபாகத்தில்தான் குண்டியின்தசைகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்தவிதமாய் அடிவயிற்று என்புக்கூட்டை நோக்குமிடத்து அது ஒரு கோப்பைபோலிருக்கும். இந்தக்காலியிடத்தையே உபஸ்தாசயம் என்று சொல்லுவது. இந்தவெலும்புக்கூட்டத்திற்கு இடுப்புவளையம் என்றுபெயர்.

II. தலையெலும்பு—முகவெலும்பு.

தலையிலுள்ளவெலும்புகளில் ஒரு விசேடமுண்டு. அது என்னவெனில் அவைகளெல்லாம் தங்களுடைய ரம்பப்பற்களைப்போன்ற ஓரங்கள் ஒன்றோடொன்று பொருந்திப் பலப்படுவதால் ஒரேஎலும்புபோல் இருக்கின்றன. ஆனால் (படம் 1. பார்க்க) கீழ்த்தாடை (முகவாய்க்கட்டை) யெலும்பு இவற்றுள் அடங்கினதல்ல. தலையெலும்புகள் இருவகைப்படும். அதாவது: i. மண்டையெலும்புகள். ii. முகவெலும்புகள்.

i. மண்டையெலும்புகள் எல்லாம் ஒழுங்கற்றன. மண்டையெலும்புக்கூட்டம் அடியில் ஒருகோணலான வெலும்பாலும், இருபக்கங்களிலும், முன்பின் இருபுறங்களிலும், உச்சியிலும் சப்பட்டையானவெலும்புகளாலும் ஆக்கப்பட்டது. இந்தச்சப்

பட்டையான வெலும்புகளில் பொட்டெலும்புகள் இரண்டு; காதின் புறவெலும்புகள் இரண்டு. நெற்றியெலும்பு ஒன்று; பின்புறத்து வளைந்த கபாலப்பின்னெலும்பு ஒன்று; ஆக ஆறு. கடைசியில் சொன்ன பின்னெலும்பின் அடிப்புறத்தில் ஒரு பெரிய துவாரம் உண்டு. (இந்தப்பின்னெலும்பே மண்டைக்கூட்டின் அடிப்புறத்துப் பாகமுமாகும்.) துவாரத்தின் இருபுறத்திலும் பக்கத்திற்கொன்றான மிருதுவான இடங்கள் இருக்கின்றன. இந்தவிடங்களில் தான் மேற்கூறிய அட்லாஸ் எலும்போடு மண்டையெலும்புகள் பொருந்தும். (149-ம் பக்கம் பார்க்க) இந்தவிதமான ஏற்பாட்டினால்தான் மண்டைக்கூடு முதுகுத்தண்டின்மேல் நிற்கின்றது. மண்டையெலும்பின் அடிப்புறத்தின் மற்றோர்பகுதியானது "ஸ்பெனாயிடு" என்னும் மிகவுங்கோணலான (வௌவாலைப்போன்ற) ஒருஎலும்பினாலும் இரண்டு பொட்டெலும்பின் அடிப்புறங்களினாலும் ஆக்கப்பட்டது.

II. முகவெலும்புகள். இவைகளில் அடங்கியவை மேல்முகவாய், கீழ் முகவாய், மூக்கு, கன்னம், மேல்வாய் இவற்றின் எலும்புகள். கட்குழியின் எல்லையாய எலும்புகள் எவை எனில் கீழே மேல்முகவாய் எலும்பு, மேலே மண்டையெலும்பின் முன்பாகமாகிய நெற்றியெலும்பு, புறங்களில் கன்னவெலும்புகள். உட்குழியில் 'லக்ரீமல்' என்னும் இரண்டு சிறியவெலும்புகள். முகவெலும்புகளில் மிகவும் கனமுள்ளதும் வன்மையுள்ளதும் கீழ்த்தாடையெலும்பு. அது வில்லைப்போல் வளைந்துள்ளது. அதின் முன் வளைவு முகவாய்க்கட்டை ஆகிறது. அதிலிருந்து இருபுறத்திலும் பின்னே மேற்புறமாக வளைந்துசெல்லும் எலும்புகள் காதிருக்கும் இடத்தின்கீழ் பொட்டெலும்பின் அடியில் பொருந்துகின்றன. இந்தக்கீலானது மூன்றுவிதமான அசைவுகளுக்கு இடங்கொடுக்கிறது. மேல் கீழ், முன் பின், வலம் இடம்; ஆகிய மூன்றுமே இந்தவகைகளாம்.

III. கையெலும்பு. IV காலெலும்பு.

கவனித்துநோக்குங்கால் கைகால்களின் அமைப்பு ஒரேவிதமானது. மேற்கை தொடை, முன்கை முன்கால்—இவற்றில் பெரிய நீளமான எலும்புகளும், மணிக்கட்டு கணுக்கால், புறங்கை புறங்கால், கைவிரல்கள் கால்விரல்கள்—இவற்றில் சிறியனவும் ஒழுங்கற்றனவுமான எலும்புகளும் இருக்கின்றன. நீண்ட எலும்புகள்

மூன்றுபாகங்களுள்ளன: (1) கனமுள்ள தலைப்புறம், (2) நீண்ட உடல், (3) அகன்ற அடிப்புறம். அடிப்புறங்கள் பற்பலஉருவை உடையன. ஏனெனில். அவைகள் பற்பலவிதமான (படம் 1. பார்க்க) கீல்களில் பொருந்துவனவாதலால் வெவ்வேறுகீல்களுக் குத்தக்கவகையாய் அவற்றின் அடிப்புறங்கள் அமைந்திருத்தல் வேண்டும். கீல்களைப்பற்றிச்சொல்லுமிடத்து அவற்றின் வேறுபாடுகளை விரித்துச்சொல்லுவோம்.

முதிர்ந்தவயதில் சற்றேறக்குறைய இருநூற்றாறுதேர்ந்த எலும்புகள் நம்முடலில் உள்ளன. ஆயினும் வயதிற்கேற்றபடி கொஞ்சம் வித்தியாசம் ஏற்படும். ஏனெனில், நாளடைவிலே சிற்சிலவெலும்புகள் ஒன்றாய்ச்சேர்ந்துவிடுகின்றன.

(அத்தியாயம்மு1. முற்றும்.)

(இன்னும் வரும்.)

T. K. கோபாலராவ், B. A.

பவர்தறிகளும் நாட்டுக் கைத்தறிகளும். *

சுதேச வஸ்திரத்திற்கு இப்பொழுது தற்காலத்தில் ஏற்பட்ட அதிக தேவைக்குத்தக்கவாறு நாம் எவ்வித உபாயம் செய்தால் கொடுத்துச் சமாளிக்க முடியுமென்று பலரால் பலவித அபிப்பிராயங்கள் வெளிவந்திருக்கின்றன. அதிலொன்று முக்கியமாக எல்லோராலும் வற்புறுத்திக் கூறப்பட்டது யாதெனில் வஸ்திரம் நெய்யும் பவர்தறிகளை அநேகம் கொண்ட யந்திரசாலைகளைப் பலவிடங்களில் ஸ்தாபிக்கவேண்டுமென்பதே. மேலே காட்டிய அபிப்பிராயத்தைக் கொடுத்தவர்கள் தாங்கள் மேற்கொண்ட விஷயத்திற்கு ஒரு வழிகாட்டினார்களேயல்லது செட்டாகச் செலவு செய்து ஒருகைத்தொழில் விருத்தியாகும் வண்ணம் அவர்கள் யோசித்து அவ்வபிப்பிராயத்தைத் தரவில்லையென்பது என் துணிபு. பவர் நெசவுயந்திரசாலைகளை ஏற்படுத்தத்தக்க முதலில்லாத குறை ஒன்றேதானென்றால், தற்காலத்திலுண்டான முயற்சிக்கு வெகுகாலமுன்னமே இந்தியாவின் தேவைக்கு

* சாகிரகரத்தில் நடந்த கைத்தொழிற் சங்கத்தில் மிஸ்டர் ஹாவல் துரை அவர்கள் செய்த உபந்நியாசத்தின் கருத்து.

வேண்டிய வஸ்திரங்களை விரைவில் நெய்து கொடுக்கக்கூடிய அநேக நெசவு யந்திரசாலைகள் ஏற்பட்டிருக்கும். அப்படி அவைகள் ஏற்பட்டிருக்குமாயின் தற்காலத்தில் ஒருநாட்டுக் கைத்தறிகூட இல்லாமல் அழிந்துபோயிருக்கும். உண்மையா தெனின் 50 வருஷகாலமாக நாட்டுத்தறிக்கும் பவர்தறிக்கும் போட்டி ஏற்பட்டிருந்தும் அதற்குச் சளையாமல் விவசாயத்திற் கடுத்தபடியாய் இவ்விந்தியாவில் கைத்தொழில் நிலைபெற்றிருக் கின்றபடியால் ஐரோப்பாவில் நடந்தேறிவரும் நெசவுத் தொழி லினும் இந்தியாவின் நெசவுக் கைத்தொழில் மிகமாறுபாடுள்ள தென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது.

அப்படியிருக்கிறபடியால் இந்தியாவிலுள்ள நெசவுக் கைத் தொழிலாளிகள் பவர்தறிக்குச் சளையாமல் நெய்யக்கூடும். ஆயி னும் விரைவில் நெய்யக்கூடிய தக்க கைத்தறிகளை நிருமித்து எளிதில் அறியுமாறு அவர்களைப் பயிற்றுவிப்போமாகில் பவர்தறி கள் நெய்வதைவிட அநேகமடங்கு அவர்கள் நெய்வார்கள். நான் எடுத்துக்காட்டிய விஷயத்தினுண்மையையறிந்து அதை மேன்மேலும் விருத்திக்குக்கொண்டுவர ஒவ்வொருவரும் முயல வேண்டும். அப்படி முயல்வதே திடமான செய்கையாம். இதற் கென்று ஏற்பட்ட முதற்பொருளை ஐரோப்பாவில் நடந்தேறும் கைத்தொழிலின் தன்மைகொண்டு இங்குநடைபெறும் பலவிதக் கைத்தொழில்களுக்கும் பிரிந்துக்கொடுக்காதிருத்தல் வேண்டும். ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் நெசவுக் கைத்தொழிலினும் இந்தியாவில் நடைபெறுகின்ற நெசவுக் கைத்தொழில் ஓர் சீர்தி ருத்தமென்றே காருண்யத்தை மனதில்கொண்ட ஒவ்வொருவரு ம்சொல்லுவார்கள். இப்போதுள்ள பவர்தறி யந்திரசாலைகளில் நடக்கும் வேலை சீரப்பிரயாசமற்றதாயும்நெறிமுறையற்றதாயும் அறிவு விருத்திக்கு இடமில்லாததாயுமிருக்கின்றது.

வங்காளத்தில் இப்போது நாட்டுத்தறியில் வேலை செய்பவர் கள் நாலுலக்ஷம்பேர்களென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது இந்தியாவில் சுதேசவஸ்திரத்தின் தேவை அதிகப் பட்டிருப்பதால் அதற்குத்தக்கபடி நெசவுவேலைக்காரர்களும் அதிகப்படுவார்கள். மேலே காட்டிய காரணத்தால் வங்காளத் தில் நெசவுத்தொழிலைச் சிலகாலமாக விட்டுவிட்டு வேறுவேலை மேற்கொண்ட பல நெசவுத்தொழிலாளிகள் அப்புதிய தொழில் களை நீக்கிவிட்டுத் தங்கள் பூர்வீகத் தொழிலாகிய நெசவுத்தொ

ழிலைச் செய்ய வந்துகொண்டிருக்கிறார்கள். இத்தொழிலின் பிர
யோசனத்தையடைந்தவர்கள் அநேகர். பவர் நெசவு யந்திரசா
லைகளில் வேலைசெய்பவர்களுக்குக் கூலிகொஞ்சம் அதிகப்பட்டி
ருந்தபோதிலும் அதில் வேலை செய்பவர்களின் தொகைமிக
சொல்பமே. அவர்களின் சரீரதிடமும் சன்மார்க்கநெறியும் புத்
திநுட்பமும் சீர்குலைந்து போகின்றன. சீர்திருத்தமடைந்திருக்
கிற நெசவுக்கைத்தறி, பாவு நூல்தறி ஒன்றுக்கு 10 ரூ வீதம்
செலவு செய்தால் வங்காளத்திலுள்ள 4 லக்ஷம் தறிகளும் இப்
போது நெய்யப்படும் வஸ்திரத்தினளவைக்காட்டிலும் இரட்டிப்
பளவு நெய்யக்கூடும். இச்சீர்திருத்தத்திற்கு 40 லக்ஷம் ரூபாய்
ஆகும். இதே தொகையைக்கொண்டு இரண்டு அல்லது மூன்
று பவர் யந்திரசாலைகளை ஸ்தாபிக்கக்கூடும். அவைகள் 4
லக்ஷம் கைத்தறிகளால் குறிப்பிட்ட காலத்தில் நெய்யக்கூடிய
வஸ்திரத்தின் இருபதில் ஒருபாகங்கூட நெய்யமுடியாது: இந்
தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற நெசவுயந்திர சாலைகளில்,
காலத்துக்குத்தக்கவாறு சீர்திருத்தமடையாது பலநூற்றாண்டு
களாகக் கையாடிவந்த நெசவுத் தறிகளைக் கொண்டு இந்துக்கள்
நெய்யும் வஸ்திரத்தினளவுக்குச் சமமாய் நெய்யப்படுகிறதென்
றால், நூதனக் கைத்தறிகளைக்கொண்டு அவர்கள் 2, 3, 4
மடங்கு முன்னிலும் அதிகம் நெய்யும்போது நெசவு யந்திரசா
லைகள் எப்படிப் போட்டிக்கு நிற்கக்கூடும்? ஐரோப்பாவிலுள்ள
மிகமேன்பட்ட சிலயந்திரத் தொழிற்சாலைகள் பவர் தறிக்குச்
சமமாக வேகமாய்க் கைத்தறியில் நெய்ய முதன்மைவாய்ந்த
நூதனத்தறிகளைச்செய்துவருகிறார்கள், அங்கவஸ்திரங்களையும்
சல்லாக்களையும் செய்வதற்கு மிஸ்ஸர்ஸ் ஹாட்டர்ஸிலி அன்
ஸன்ஸ் Messrs Hattersley and sons, Keightly நூதனத்தறி
யொன்றை நிர்மித்துவிட்டார்கள். அவர்கள் அத்தறிகளைமிகவும்
குறைந்தவிலைக்குக் கொடுக்கிறார்கள். இந்துதேச நெசவு வேலைக்
காரர்களுக்குத் தக்கவாறு ஒரு நெசவுத்தறி நிருமிக்கவேண்டுமெ
ன்று இங்கிலாந்தில் நெசவுத்தொழில்மிகுந்த மான்சஸ்டர் நகரில்
ஜான் டெல்டன் தெருவிலிருக்கிற ரபேயில் சகோதர கம்பெனி
யாரை நான் கேட்டுக்கொண்டேன் அவர்கள் அவ்விஷயத்தில்
தங்கள் புத்திநுட்பத்தைச் செலுத்தி சிலகாலமாக முயற்சியெடு
த்து வேலைசெய்துவந்தார்கள். இப்போதவர்கள் தங்கள் முயற்சி
வீண்போகாமல் இந்தியாவிலுள்ள வேலைக்காரர்கள் இலகுவில்

யாடக்கூடியவும் இலேசானதுமான ஒருதறியை நிருமித்துவிட்டதாக எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அது 1906வூலத்தின் ஆரம்பத்தில்வேண்டுவோர்களுக்கு விலைக்கு விற்கப்படுமென்று நான் நம்புகிறேன். இவ்விஷயத்தைப்பற்றி இந்தியாவிலுள்ள அநேக புத்திமான்கள் முயற்சியெடுத்துப் பிரயாசைப்பட்டு வருகிறார்களென்று தெரியவருகிறது. இந்தியாவிலுள்ள நெசவுக்கைத்தறிகளையும் அவைகளின் உபகரணங்களையும் சீர்திருத்தவேண்டுமென்பதே தற்காலத்தின் முதன் முயற்சியாய்விட்டது. அது இந்தியாவில் பலவிடங்களிலும் விரைவில் பரவுகிறது. இந்தியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ள பவர் தறிகள் இப்போதிருப்பதைவிட மிகக்கடுமையான ஓர் போட்டியைக் கொஞ்சகாலத்தில் எதிர்க்கும்படி நேரிடும். இவ்விதக்காரணங்களால் புத்தியுள்ள செல்வர்கள் தங்கள் திரவியத்தை பவர் யந்திரத்தறிகளை வைத்து வேலை செய்வதில் செலவு செய்யக்கருதார்களென்று நான் நினைக்கிறேன்.

இந்தியாவில் நெசவுக் கைத்தொழிலை விருத்திசெய்ய விரும்பும் சுதேசாபிமானிகளும் ஜனங்களின் பொதுநன்மையை நாடும் பெரியோர்களும் தங்கள் தங்கள் திரவியத்தை (1) சீர்திருத்தமடைந்த நூதனத் தறிகளைச் செய்வதிலும் (2) தகுந்த விடங்களில் நெசவுக் கைத்தறிச்சாலைகளை ஏற்படுத்துவதிலும் (3) நூலிழைப்பதிலும் மிக லாபகரத்தோடு உபயோகிக்கலாம். நெசவுக்கைத்தொழில் அதிக விருத்தியடையவடையஅது நூலிழைக்கிற பஞ்சயந்திரசாலைகளுக்கு மிகவும் லாபகரத்தையுண்டுபண்ணுமென்பதுயாவர்க்குந் தெரிந்தவிஷயமே. அது எப்படியெனில் நெசவுக்கைத்தறிகள் அதிகப்படுமாயின் அவைகளுக்கு நூல் அதிகம் தேவையாகும். தேவைக்குத் தக்கவாறு நாட்டுக்கை ராட்டினங்களால் நூலிழைத்துக்கொடுக்க முடியா. பவர்தறிகளுக்குச் சமமாக விரைவில் நெய்யக்கூடிய புதிய நூதனத் தறிகள் நிருமிக்கப்பட்டதுபோல சொற்பகாலத்தில் கைராட்டினங்களில் மிகுதியான நூலிழைக்கும்படி நூதன ஏற்பாடுகளைச் செய்யத்தகுந்த ஏதுக்களொன்றுமில்லை. ஆனால் கொஞ்சகாலஞ்சென்றபின் இவ்விஷயத்தைப்பற்றிப் புத்திமான்கள் கவனிப்பார்களென்று நம்புகிறேன்.

நெசவு மிகுந்த இடங்களுக்கு மத்தியில் நூலிழைக்கும் பஞ்சயந்திரசாலை யொன்றை அமைப்பதே மிக ஏற்றமானதாம்.

அது நூலிழைப்பதுடன் பாவுநூல்களையும் தயார்செய்து நெய்பவர்கள் வீட்டிலும் கைத்தறி மிகுந்த நெசவுச்சாலைகளிலும் அவைகள்போய்ச்சேரும்படி வேண்டிய உதவிபுரியவேண்டும். மேற்சொன்ன வேலைகளைச் செய்வதுமல்லாமல் நெசவுவேலை செய்பவர்களுக்குப் புதிய கைத்தறிகளைத் தருவிப்பதிலும் அவைகளை உபயோகிக்கும் வழிகளை யெடுத்துக்காட்டுவதிலும் பழுதாய்ப்போன தறிகளைப் பழுதுபார்ப்பதிலும் நெய்த வஸ்திரங்களைப் பலவிடங்களில் பரவும்படி செய்வதிலும் ஏஜண்டாக இருந்து சகாயம் செய்துவரவேண்டும்.

மேலேகாட்டிய விதம் நெசவுவேலைக்காரர்கள் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து ஒற்றுமையாய் வாழ்வார்களானால் தக்க முதலுள்ளவர்களாவதுடன் பவர்த்தறிகள் நிலைத்து நிற்காவண்ணம் ஒரு பெரும் போட்டிக்காரர்களாவார்கள். கைத்தொழிலில் மிகச் சாமர்த்தியமடைந்த வித்வான்கள் "கைத்தறி பவர்த்தறிகளோடு மாத்திரமா போட்டியோடு நிற்கும்? மின்சார பவர்த்தறியோடும் போட்டிபோடும்" என்று பரிகாசம் செய்கிறார்கள். அதற்குக் காரணம் யான் சொல்வதை அவரவர்கள் சரிவர அறியாதகுற்றமே யொழிய வேறல்ல. 100 டன் நிறையுள்ள ஒரு பீரங்கி செய்வதிலும் இன்னும் இதுபோன்ற மகத்தானவேலை செய்வதிலும் நீராவி மின்சாரவல்லமை பயன்படுமே யல்லது ஒருமனித பலத்துக்குட்பட்ட வேலைகளில் மிகப் பயன்படாதென்பதை அவர்கள் முற்றிலும் மறந்தார்கள்போலும். மனிதன் சரியான கைத்தறியொன்றைக் கையாடுவானாயின் அவனிடமுள்ள சக்தி நீராவி, அல்லது மின்சாரசக்திக்குச் சமமென்றேசொல்லவேண்டும். மேலும் அவைகளைவிட இவன் சக்திக்கு ஒருவிசேஷமுண்டு. அது யாதெனின், இவன் தன் சக்தியைத் தன்வேலைக்குத் தக்கவாறுபிரயோகித்து அடக்கியாளலாம். நெசவுத்தொழில் இவ்வித வகுப்பைச்சேர்ந்தது. நெசவு நெய்யும்பொழுது நாடாவைத்தள்ள நீராவி, மின்சாரம், நெய்பவன் கை இவை உபயோகிக்கும் சக்தி ஒரேயளவே ஜாஸ்தியான சக்தியை உபயோகப்படுத்தினால் அது பிரயோஜனமற்றதாகப் போவதுமல்லாமல் பலவிதக்கெடுதிகளையும் செய்துவிடுகிறது. நாடா மிக வேகமாய் ஓடுவதால் பாவுநூல்களை அறுத்துவிடுகின்றது. அவைகளைச் சீர்படுத்தவேண்டியிருப்பதால் காலதாமதத்தையும் உண்டுபண்ணுகிறது. இவ்விதமாக நெய்யப்பட்ட வஸ்திரத்தின் தன்மை

மிக மேன்மையாகவுமிராது. இத்தொழிலின் லாபகரத்தின் தன்மை இத்தொழிலைச்செய்யும் யந்திரங்களின் வல்லமையைப் பொருந்தியதல்ல. அவ்வெந்திரங்ளின் விலையின் தாரதம்மியத்தைப் பொருந்தி இருக்கிறது. ஐரோப்பாவில் ஒரு தறிக்கு வேண்டிய யந்திரவல்லமையின் விலை மிகவும் சொல்பம். ஆதலால் தான் ஐரோப்பாவில் கைத்தறிக ளற்றுப்போக பவர்தறிகள் எங்கும் பரவியது. இந்தியாவில் வேலைசெய்பவர்களின் கூலி மிகவும் சொல்பம் ஆதலால் கைத்தறிகள் பவர்தறிகளோடு போட்டிக்கு நிற்கின்றன. வேலைக்காரர்களின் கூலி யந்திரசகாயத்தால் அடையக்கூடிய அளவிற்கு வேற்படின் கைத்தறிகள் போட்டிக்கு நிற்கமுடியா. அந்நிலைமைக்கு இப்போது வராதென்பது நிச்சயம். அப்படி வரவேண்டுமானால் இந்தியா இப்பொழுதிருப்பதினும் அநேகமடங்கு செல்வமிகுந்த நாடாகவேண்டும்.

K. இராமானுஜ ஐயங்கார்.

சுதேச பாஷாபிவிருத்தி. *

நமது ஸர்வகலாசாலைக்குரிய பட்டங்களைப்பெற்றவர்களின் கல்விப் பெருக்கமும் புத்திப்பயிர்ச்சியும் எப்படிப்பட்டவை என்பதைக் கவனிப்போம்; இப்படி ஆராய்ந்துபார்க்கும்போது நாம் ஏமாறிப்போகும்படியான குறைவு ஒன்றும் இல்லையென்றாலும் எவ்வளவு திருப்திகரமாக இருந்திருக்கக்கூடுமோ அதைவிடக் குறைவாக இருக்கிறது. இந்த அம்சத்தில் தான் நமது கல்விப்பயிற்சி கொஞ்சம் குறைவுபட்டுப்போயிற்று. இதற்கு முக்கியமான காரணங்கள், இங்கிலீஷாகிய கடினமுள்ள அந்நிய பாஷையை நன்கு பயிலவேண்டியதாகிய அசௌகரியமும், அந்த அந்நியபாஷையின் மூலமாகவே அநேகமாய் எல்லாவித அறிவையும் பெறவேண்டியதாகிய அசௌகரியமும்தான் என்பது எனது கொள்கை. இதிலும் பெரிய இடைஞ்சல் யாதெனில், இங்கிலீஷ் கல்வி போதிக்கும் கருவியாகச் செய்யப்படுகிறது என்பதுதான். நமது பாடசாலையில் மிக்க இளமையிலே அந்த பாஷையில் சிந்திக்கும்படிக்கும் எழுதும்படிக்கும் படிக்கும்

* சென்னை ஸர்வகலாசாலைப் பட்டமளிக்கும் மகோத்ஸவகாலத்தில் கூடியிருந்த வித்தியார்த்திகளுக்கு மகா-ள-ள-ஸ்ரீ நாகோஜிராயரவர்கள் செய்த பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது.

படிக்கும் மாணாக்கர்களை நிர்ப்பந்திக்கிறோம். இந்த நிர்ப்பந்தம் இரண்டுவிதமான தீங்குகளை விளைவிக்கின்றது. இங்கிலீஷை ஒரு பாஷையாக அப்பியசிப்பதற்கே இது இடைஞ்சலாக ஏற்படுகிறது. இப்படிச்சொல்வது அதிசயமாகத்தோன்றலாம்; ஆயினும் இது மெய்யே. அரைகுறையாகக் கற்ற பாஷையில் தங்கள் கருத்துக்களை வெளியிடும்படி செய்வதினால் இப்படிப்பட்ட இடைஞ்சல் உண்டாகும் என்கிற உண்மை சற்று யோஜித்துப்பார்த்தாலே விளங்கும். தவறுதலான மொழிகளையும் தவறுதலான மரபுகளையும் இலக்கண வழுக்களையும் அவர்கள் உபயோகிக்கவேண்டியிருக்கிறது. இவ்விதப் பிரயோகங்கள் மாணாக்கர்களின் சுபாஷைகளில் மிகவும் உசிதமானவைகளாக இருக்கலாம்; ஆனால் அவைகள் இங்கிலீஷில் ஏற்ற மொழிகளாகவும் உசிதமான பிரயோகங்களாகவும் இருக்கவேண்டியது அவசியமில்லை. சுதேசபாஷைகளில் பரிசயம்பெற்று அத்தோடு இங்கிலீஷ் கற்பிக்கும்உபாத்தியாயர்களாகவும் பரிக்ஷகர்களாகவும் இருந்து சுதேச மாணாக்கர்களின் இங்கிலீஷ் நடையின் தன்மையை நன்றாக அறிந்து சொல்லுகிறவர்களின் அபிப்பிராயம் யாது எனில்: ஒரு பாஷையின் மரபையும் இலக்கணத்தையும் மற்றொரு பாஷையோடு கொண்டுபோய்க் கலப்பதுதான் காரணம் என்பது. சுதேசபாஷையில் சிறந்த பிரயோகமாக இருக்கும் மரபு இங்கிலீஷில் பிரயோகிக்கப்படும்போது மிகவும் பரிகாசகரமாக சப்திக்கிறது. இதேகாரணத்தால், ஆங்கிலேயர் காதுக்கு எதுவெது சகஜமாக சப்திக்கிறதோ அது பதம்பதமாக சுதேசபாஷையில் மொழி பெயர்க்கப்பட்டால் சிரிப்புக்குக் காரணமாகிறது. இங்கிலீஷை அதி பாலியத்திலிருந்தே கல்வி போதனைக்கும் சிந்தனைக்கும் கருவியாகச் செய்துவிட்டால் மாணாக்கர்கள் பிழை செய்வது நிச்சயம். இவ்வாறு நீக்கமுடியாது பால்யத்திலேயே ஏற்பட்ட பிழைகள் சில பிள்ளைகளிடத்தில் ஆயுளுள்ள அளவும் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. அவைகளைக் களைந்து சுத்தம் பெறுவதே சாத்தியமில்லாமற்போகிறது. இளமையிலேயே உள்ளத்தில் பதிக்கப்பட்ட பிழைகள் பிறகு களையப்படுவது அரிது. பகுத்தறிவிற்கு ஒத்துவராத இவ்வழக்கம் மேற்கூறியது போலவே வேறொரு கெடுதலையும் உண்டாக்குகிறது. பையனுக்கு சுதேசபாஷையில் உண்டாகும் ஞானமும் திருத்தமில்லாமற் போகிறது. தங்கள் சிந்தனையை இங்கிலீஷிலேயே நடத்த முயல்கிறார்கள். அதுவும் நன்றாக நடைபெறுகிறதில்லை. இதே காரி

ணத்தால் சுதேச பாஷையில் சிந்தித்தல் பங்கப்படுகிறது. இதன் பயன் யாதெனில் பள்ளிக்கூடத்துப் படிப்பு அல்லது கலாசாலைப் படிப்பு ஆனபிறகு இம்மாணவர்களிற் பெரும்பான்மையோர் தெளிவும் திருத்தமுமுள்ள இங்கிலீஷ் நடையில் தங்கள் கருத்தை வெளியிடச் சக்தியற்றவர்களாகிறார்கள்; இதுமாத்திரமல்ல. தங்கள் சுபாஷையில் தங்கள் அபிப்பிராயங்களைத் தாராளமாகவும் திருத்தமாகவும் தெரிவிப்பதற்குத் திறமை இங்கிலீஷ் ஞானத்தைவிடக் குறைவாகிவிடுகிறது. இதிலும் விசனிக்கத் தகுந்தது யாதெனில், சிந்திக்கும் முறையே தெளிவில்லாமலும் பிழைபாடுள்ளதாகவும் ஆய்விடுகின்றது. ஒருவன் பேசும் பாஷைக்கும் கருதும் எண்ணங்களுக்கும் சம்பந்தம் மிகவும் நெருக்கமானது. இதனால் பேசும் பாஷைக்குத் தக்கபடி சிந்திக்கும் முறையும், சிந்திக்கும் முறைக்குத் தகுந்தபடி பாஷையும், மாறி மாறி வேறுபாடடைவது இயற்கை. சிந்திக்கும் முறை தெளிவற்றிருந்தால், பேசும் மொழிகளும் பிழைபாடுடையனவாக இருக்கும். பேசும் மொழிகள் குழப்பமுள்ளவைகளாகவும் தப்பிதமுள்ளவைகளாகவும் இருந்தால் அதற்குத் தக்கபடி சிந்திக்கும்முறையும் குழப்பமடைந்து பிழைபாடுள்ளதாகும். இக்காலத்துக் கல்விபோதிக்கும் முறை திருப்திகரமில்லாதிருப்பதற்கு வேறுகாரணங்களும் உண்டு. ஆயினும் இதுவே முக்கிய காரணம் என்பது எனது கொள்கை. என் கருத்தை ஒருவரும் தப்பாககிரகிக்காமல் இருக்கவேண்டும் என்று எனக்கு மிகக்கவலை. நமதுபாடசாலைகளின் கீழ்வகுப்புகளில்கூட இங்கிலீஷை ஒரு பாஷையாக வைத்துப் படிக்கவேண்டாமென்று நான் சொல்ல வரவில்லை. எவ்வளவுக் கெவ்வளவு பாலியத்தில் சீக்கிரமாக இங்கிலீஷ் பேசும் பாஷையாக அப்பியாசிக்கப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அது அதிக நன்றாகக் கற்கப்படுகிறது. அறிவு புகட்டும் கருவியாக இங்கிலீஷை ஒருபோதும் உபயோகப்படுத்தக் கூடாதென்று நான் சொல்லவரவில்லை. பிராசீனமான வடமொழி முதலிய உத்கிருஷ்ட பாஷைகளிலும் தமிழ் முதலிய இக்காலத்துப் பேசும் பாஷைகளிலும் செய்யுள், தத்துவஞானம், சமயக்கல்வி முதலிய விஷயங்களைப்பற்றிய நூல்கள் மிகுந்து வளப்பமுற்றிருக்கின்றன என்பது மெய்யே. ஆயினும் நமது மொழிகளை இக்காலத்தில் நாகரிகம் பெற்று மேன்மையடைந்திருக்கும் நாட்டார்களின் மொழிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்

போது, சரித்திரநூல், தத்துவசாஸ்திரம் (ஸைன்ஸ்), தொழிற் கல்வி, முதலிய அம்சங்களில் மிகவும் குறைவாக இருக்கின்றன. இவ்வுலகில் மேம்பாடடைந்திருக்கும் நாட்டாருக்கு நமது இந்தியா சமதையாக எப்போதாவது வரவேண்டுமென்றால், நமது நாட்டின் மேன்மக்கள் அவ்வேற்று நாட்டார்கள் பெற்றிருக்கும் (நூதன) அறிவை அடைவதற்கு வழிபெறவேண்டும். இவ்வித (நவீன) அறிவு அடங்கிய பெட்டிக்குத் திறவுகோல் ஐரோப்பாவின் நவீன பாஷைகளிலொன்றாகவே இருக்கவேண்டும். நமது மேன்மக்கள் ஆங்கில பாஷையை மிகவும் ஜாக்கிரதையுடன் ஆராயவேண்டுவது அவசியம். இந்தக்காரணத்தால் ஆங்கிலமொழி நம்முடைய உயர்தரப் பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் கட்டாயபட்சமாகப் படிக்கப்படவேண்டிய பாஷையாக இருக்கவேண்டியது அத்தியாவசியம். ஆயினும், இங்கிலீஷ் ஜனங்களின் பாஷையாக ஒருக்காலும் ஆகமுடியாது; ஜனங்களில் பெரும்பான்மையோர் ஆங்கில அறிவு இல்லாமலே இருக்கும்படி நேரிடும்; இயற்கை நூலறிவு (ஸைன்ஸ்) ஜனங்களுக்கு எட்டிப் பலன் தரவேண்டுமானால், இங்கிலீஸ் கல்வியில் பயிற்சி பெற்றோர் அடைந்த அறிவு சுதேச பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு இங்கிலீஷ் படிக்காதவருக்குப் பயன்படும்படி செய்யப்படவேண்டும்; ஆதலால் நமது கல்விமான்களில் ஆங்கில வித்தியாபாரங்கதராக இருப்பவர்கள் சுதேசபாஷைகளிலும் வல்லவராய் இருத்தல் மெத்த அவசியம். நமது பாடசாலைகளின் கீழ்வகுப்புகளில் சாத்தியமானமட்டும் சுதேச பாஷை அறிவு புகட்டுங் கருவியாக இருக்கவேண்டும். ஐரோப்பிய பாஷைகளைப்போல் நமது நாட்டுப்பாஷைகளில் சிலவோ அல்லது எல்லாமோ பலவித அறிவுகளைப்பற்றிய நூல்களால் நிறைந்து சிறப்புப்பெற்றபிறகும், மேனாட்டுக் கலைஞானங்களில் தாங்கள் பெற்றிருக்கும் அறிவுடன் தேசாபாஷாக் ஞானமும் உடைய போதகாசிரியர், உபாத்தியாயர் முதலியோர் கிடைத்த பிறகுந் தான் கலாசாலைகளில் சுதேச பாஷைகளை மேலான அறிவு புகட்டும் பாஷைகளாக உயர்தரப் பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் நாம் உபயோகிக்கலாம். அப்படிப்பட்ட சௌகரியங்கள் நமக்கு ஏற்படுகிறவரையில், கலாசாலைகளிலும் உயர்தரப் பாடசாலைகளிலும் இங்கிலீஷே அறிவு புகட்டும் கருவியாக இருத்தல் வேண்டும்.

உ. நா. அப்பாசாமி ஐயர்.

வைதிகமாகிய இருமீமாம்ஸா மதங்கள்.*

இப்பொழுது இந்துக்களுடைய க்டையிரண்டு சித்தாந்தங்களாகிய ஜைமினியின் பூர்வமீமாம்ஸையும், பாதராயணவியாசருடைய உத்தரமீமாம்ஸையும் எடுத்துக்காட்டுவோம். சாஸ்திரமென்னலாம்படிக்கு ஒருபுதுமையும் தம்முள்ளில்லாதிருப்பினும் சரித்திரவிஷயமாய் எழுதப்புகுவார்க்கு இவை வெகுமுக்கியமானதும் உபயோகமுள்ளதாயுமிருக்கின்றன. ஏனெனில் தார்க்கிகர்களும் மற்றையசாமான்னியர்களும் நாளடைவிலேயே நாத்திகத்திலும் அவைதீகத்திலும் பிரவர்த்தித்துக்கொண்டிருக்க இம்மீமாம்ஸையார்மாத்திரமே தொன்மையாகிய இந்துமதாசாரங்களில் ஒழுகிவந்தார்கள். சாங்கியம் பலஅறிவாளர்களைப் பரமாத்துமவாதம் புகட்டும் உபநிஷதத்தினின்றும் வேறுபடுத்திற்று; பற்பலவிஸ்தாரமான வைதீகச்சடங்குகளினின்றும், ஜாதிபேதத்தினின்றும் தப்பும்பொருட்டும் சாமானியசனங்கள் ஏராளமாய் பௌத்தமதத்தைத்தழுவினர்கள். இவ்வாறு பிறமதங்களில் சனங்கள்புகுங்காலத்தும், இருமீமாம்ஸைகளும் தளர்ச்சியடையாமலிருந்தன. உபயோகமேயில்லாதன அசுத்தமாயின என்று நவீனராகிய (பௌத்தமுதலிய பிறமதஸ்தர்கள்) கூறும் வைதிகச்சடங்குகள் செய்தலே நன்று என்று பூர்வமீமாம்ஸை ஒரேதிடமாயிருந்தது; வெகுகாலமாய் ஆஸ்திகத்தை எடுத்தாளும் உபநிஷத்துக்களின் சாரத்தை உத்தரமீமாம்ஸை உலகமறிய வற்புறுத்திற்று.

பலநூற்றாண்டுகளாய் புராதனராகிய வைதிகரும், நவீனராகிய சாங்கியபௌத்தர்களும் தத்தம் சித்தாந்தங்களின்அபிப்பிராயத்தில்பேதப் பட்டுவந்தபோதிலும் கடைசியாய்,வைதிகமே ஜெயித்தது. கிறிஸ்துபிறந்த பின்னேழாம் நூற்றாண்டிலிருந்து குமாரிலபட்டர்பூர்வமீமாம்சைக்கு 'வார்த்திகம்'என்னும்ஒருவிசேஷஉரையியற்றினர்; இவர் அப்பொழுதே மறுபடியும் தழைக்கத்தலைப்பட்ட இந்துமதத்துக்கு ஓர் அருமையான கொள்கொம்பாயும், மாரகதசையிலிருந்த பௌத்தத்துக்குச்சற்றேனுமிடங்கொடாத வைரியுமாயிருந்தார். இவர் பழமையாகிய வைதிகச்சடங்குகளை அனுபாலித்ததும் நாத்திகமாகிய பௌத்தத்தை நிராகரித்ததும் தவிர, பௌத்தர்கள் வேதமார்க்கத்தைத் தழுவினும் அவர்களுக்குக் கொஞ்சமேனும் இரங்கினரில்லை.

* Translated from Dutt's "Ancient India," Chap. 12, (Students' Edition)

குமாரிலபட்டர் காலத்திற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் அவரினும் மகானான சங்கராசாரியார் அவதரித்து, உத்தரமீமாம்ஸையை நிலைநிறுத்தினார். உத்தரமீமாம்ஸையாகிய வேதாந்தசூத்திரம் என்பது சாரீரகசாஸ்திரம் அல்லது பிரமசூத்திரமென்றும் மறுபெயர்படும். இதற்கு சங்கராசாரியார் இயற்றிய பிரபலமானவுரை சாரீரகமீமாம்ஸபாஷ்யம் என்று கூறப்படும். சங்கரர் இருந்தகாலம் எட்டாம் நூற்றாண்டின் கடைக்காலிலாவது ஒன்பதானூற்றாண்டின் முற்பாகத்திலாவது இருந்திருக்கவேண்டுமென்று கோல்புரூக், உவில்சன், ராஜாராமமோஹன்ராயர் முதலானவர்கள் நிச்சயித்திருக்கிறார்கள். இவர்களுக்குப்பிற்பட்ட பண்டிதர்கள் முயற்சியால் இக்காலநிர்ணயம் சரியானதென்று ஏற்பட்டதோடுகூட சங்கரர் கி. பி. 788 (வருஷத்தில்) பிறந்தார் என்றும் அதனாலேயே ஒன்பதானூற்றாண்டின் முதற்பாதியில் தம் சித்தாந்தத்தை வெளியிட்டார் என்றும் தெரிகிறது.

மேற்குறித்தவைகளால் குமாரிலரும் சங்கரரும் பௌராணிக காலத்தவர்களென்றும், 'புத்திப்பிராமாண்ணிய கால' த்தில் உண்டான வைதிகமதங்களைக் கடைசியாக நிலைநிறுத்தினார்களென்றும் தெரியவருகிறது. இந்து மதங்களின் சரித்திரமே இந்துக்களின் புத்திபெருகினவிதத்தைக்காட்டும் சரித்திரம். சுருக்கமாயாவது இம்மதங்களால் இந்துக்களுடைய பிற்காலத்திய சரித்திரம் எவ்வாறு மாறுபட்டுவந்தன என்பதைச் சொல்லாதுவிடின், 'புத்திப்பிராமாண்ணிய' காலத்தில் உண்டான பலமதங்களின் வரலாறு நன்கு புலப்படாது.

ஜைமினியாலியற்றப்பட்டதென்றுவழங்கும் பூர்வமீமாம்ஸை அறுபது அதிகாரங்களைத் தம்முட்கொண்ட பனிரண்டு உபந்நியாஸங்களையுடையது. இச்சூத்திரங்களுக்கு சபரசுவாமிபட்டரால் இயற்றப்பட்ட பழையதோர் உரையுளது. இவர்க்குப்பிற்பட்டவர் குமாரிலபட்டர். ஆதலால் நாம் முற்கூறியபடி, இவருரை இச்சித்தாந்தத்தைப்பற்றிய விஷயத்தில் அதிபிராபல்யமடைந்ததோடுகூட பிற்காலத்திய வியாக்கியாதாக்களால் வெகு நன்கு மதிக்கப்பட்டு வந்தது.

மேற்கூறியவாறு ஜைமினி சூத்திரம் பன்னிரண்டு உபந்நியாசத்தையுடையது. இவற்றில் முதலாவது, கர்மத்துக்கு ஆதாரங்களைக்குறிக்கிறது. இரண்டுமுதல் நான்குவரையுள்ள அதிகாரங்களில் கர்மங்களின் வேற்றுமைகளும், இவைகட்கு அனு

பந்தமான சர்மங்களும், கருமங்கள் செய்வதின் காரணமும்
கூறப்பட்டுள்ளன. அவை செய்யவேண்டிய வரிசைக்கிரமம்
ஐந்தாம் அதிகாரத்திலும், இக்கர்மங்களைச்செய்யும் கர்த்தா
வின் யோக்கியதைகளைப்பற்றி ஆருவது அதிகாரத்திலும் சொல்லி
யிருக்கிறது. முதல் பாதி சூத்திரங்கள் இந்த ஆறு உபந்நியா
சத்தி லடங்கியுள்ளன.

ஏழாவது எட்டாவது அதிகாரங்களில் மேற்கூறிய கர்பனை
களல்லாத மற்றையவைகளைக் கூறியிருக்கிறது. ஒன்பதாவதில்
அனுமானிக்கக்கூடிய மாறுபாடுகளை விவரித்துளது. (மேற்கூ
றிய விஷயங்களுக்கு) விலக்குகள் பத்தாவது அதிகாரத்திலும்,
பலன்களை பதினொன்ருவதிலும்கூறி, பன்னிரண்டாவதில் (இவை
களுக்கு) அனுபந்தமான விஷயங்களைக் குறித்த ஒரு உபந்நியா
சத்தோடு முடிக்கிறது.

இவைதாம் பூர்வமீமாம்ஸையில் விவரித்திருக்கும் முக்கிய
விஷயம்; ஆயின் இன்னம் பற்பல விஷயங்களைச் சேர்த்திருப்ப
தால், கோல்புரூக் துரையவர்கள் ஆங்கிலேயர்க்குபயோகப்படும்
படி விஸ்தாரமாய்ப் பகுத்தெழுதியதினின்றும் சிலவற்றை சூசி
ப்போம்.

வேதங்கள் அநாதியென்றும் அபௌரஷேயம் என்றும் முத
லாவது உபந்நியாசத்திலேயே தெரிவிக்கிறது. இதை (இவ்வே
தத்தை) யியற்றியவர் இன்னர் என்று (ஒருவருக்கும்) தெரியாத
தினல் இது மனிதர்களினல் செய்யப்பட்டது அன்று. இவ்வ
நாதியானதும் அபௌரஷேயமுமான வேதம் மந்திரம், பிராம
ணம் என இருபிறிவையுடையது; பத்தியரூபமாயிருக்கும் ரிக்
கும், பாடப்படும் சாமமும், இவையிரண்டுமொழிந்த எஜுஸ்
ஸும் என்று முக்கூற்றினையுடைத்து மந்திரமென்பது; சாதார
ணமாய் ஒரு ஸ்துதி, வணக்கம் முதலியவற்றைக் குறிப்பது மந்
திரமென்னப்படும். பிராமணமென்பது வைதிக கருமங்களைச்
செய்யவேண்டுமென்னும் ஓர் கற்பனை. பிராமணங்களிலுள்ள
டங்கினது உபநிஷதம். சுருதியாகிய வேதங்களுக்கு அடுத்தபடி
(முக்கியமானவை) இரிஷிகளாலியற்றப்பட்ட ஸ்மிருதிகள். இவை
வேதத்தையொட்டி எழிதப்பட்டன வென்னும் காரணத்தால்
பிராமாண்ணியமானவை. வைதிக விதிகளும், சாமான்னிய சட்
டங்களும் அடங்கிய தர்மசாஸ்திரம்—(இதுதான் 'புத்திப்பிரா
மாண்ணிய' காலத்தில் தர்ம சூத்திரமென்று பெயர்பெற்றது)—
ஸ்மிருதிக்குட்பட்டது.

தர்ம்ம சூத்திரங்களேயேயன்றி வேதம் வல்லோராலாக்கப் பட்ட கல்பசூத்திரங்களேயும் கூறியிருக்கிறது. வேதங்களின் ஓர் பாகமாயில்லாதிருப்பினும் கல்பசூத்திரங்களுக்கு வேதங்களே யொட்டியிருப்பதினலேயேதான் மரியாதை. பிராமணத்தின் சம் பந்தமான விஷயங்களே அநாதி, அபௌரஷேயம் என்றும், (தர்ம்மமுதலிய) சூத்திரங்கள் மனிதர்களால் ஆக்கப்பட்டன ஸ்வ ஸித்தமானவையல்ல என்றும், இந்துக்கள் பொதுவாய் இருகூருய்ப்பிரிப்பதைக் கொண்டே பிராமண விஷயமான கிரந்தங்கள் மற்றவையினும் முற்பட்டன என்று ஊகிக்கலாம்.

யாகஞ்செய்வது மதத்துக்கு வெகு அவசியம் என்று வேதம் கூறுகிறது. (இப்படி வேதம் கூறுவதனுலேயே) மீமாம்ஸைகளி லும் இதைக்குறித்து மிகவும் சர்ச்சித்திருக்கிறது. மற்றவையு மிப்பேற்பட்டனவே என்னத்தக்க மூன்று சடங்குகள் குறித்திருக்கின்றன; அவையாவன:—ஹோமத்துக்கு அக்கினியை வளர்த்தல், ஆகுதி கொடுத்தல், ஸோமத்தைச் சமைத்தல்; ஹோமங் களேக்குறித்துப்பல வேறு விசித்திரமானசங்கதிகளே பூர்வபக்ஷம் செய்துகொண்டு, சர்ச்சித்து ஸித்தாந்தப்படுத்தி யிருக்கின்றன. (இவைகளினியற்கையைத் தெள்ளிதினுணரற் பொருட்டு) ஒரு விசேஷமான உதாரணம் (காட்டினுல்) போதும். சில ஹோமங் களில் எஜமானன் தன் சொத்துக்கள் முழுவதையும் ஹோதாவுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. (இப்படிச் சொல்லுவதினுல்) அரசன், மேய்ச்சல்பூமி, பெருவழிகள், ஏரிகள் குளங்களடங்கிய பூமியையெல்லாம் கொடுத்துவிட லாமோ வென்றும் சங்கை ஏற்படுகிறது. அரசனுக்கு நிலம் சொந்தமில்லே, ஆதலால் கொடுக்க நியாயமில்லே என்று இதற்கு உத்தரமளிக்கப்படுகிறது. இவன் இராச்சியம் ஆளவேண்டுமே யொழிய, (இராச்சியத்தின்) பூமியில் பாத்தியமில்லே. (அப்படியன்றிக்கு, பாத்தியமுண்டு எனின்) இவன் தன் பிரஜைகளுக்குச் சொந்தமான வீடுகள், நிலங்கள் முதலியவற்றைத் தன்னதென்ன லாம். (ஆதலால்) தன்னிராச்சியத்தின் நிலத்தை அரசன் தானம் செய்யப்படாது. ஆனுல் இவன் கிரயத்துக்கு வீடு நிலம் முதலியவற்றை வாங்கித் தானம் செய்யலாம்.

(இன்னும் வரும்.)

T. A. கோபிநாதராவ் M. A.

கொழூத்துன்னூசியின் முடிவுரை. *

இன்று வந்த செந்தமிழில் ஸ்ரீமத் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் "கொழுவென்றது பாயிரத்தையும் துன்னூசியென்றது நூல் கேட்கின்றானையும் குறித்து நிற்கும் உவமங்களாம்." என்றும், கொழுவென்பது கொழுப்பென்றும் துன்னூசியென்பது அக்கொழுப்பிற்றோய்ந்த தோற்றுன்ன ரூசியென்றும் எழுதினார்கள். அவ்வுரை பொருந்தாமை காட்டுதும்.

கொழூச்சென்றவ்வழித் துன்னூசியினிது செல்லுமாறுபோலப் பாயிரங் கேட்டார்க்கு நூலினிது செல்லுமென்ற வாசகத்துள், இனிது செல்லற்கெழுவாய் நூலேயாதலின் துன்னூசி நூலைக் குறித்தலன்றி நூல்கேட்கின்றானைக் குறித்த லெவ்வாற்றானுமின்று. அற்றன்று: நூல் இனிது செல்லுமெனற்கு நூல்கேட்கின்றான் இனிது செல்லுமெனலே கருத்தெனின், நூல் கேட்கின்றான் யாங்கினிது செல்லுமெனின், நூலின்கட் செல்லுமெனலே விடையாதலான், நூல் என்பது நூல் கேட்கின்றானையுணர்த்தி எழுவாயாகிப் பின்னும் நூலின்கட் செல்லுமென ஏழாவதுருபேற்று இடப்பொருள் பயத்தல் கூடாமையானும், நூலினிது செல்லுமென்றதன்முன் பாயிரங்கேட்டார்க்கு என்றிருத்தலிற் பாயிரங்கேட்டார்க்கு நூல்கேட்கின்றான் இனிது செல்லுமெனவியைந்து ஏனையோர்க்கு நூல்கேட்கின்றான் இனிது செல்லானெனப் பொருள் பயந்து பாயிரங்கேட்டபின் நூல் கேட்டல் வேண்டுமென்னும் பொருள் பயவாமல் வழூப்படலானும் அக்கருத்தும் பொருந்தாது.

இனிப் பாயிரங்கேட்டார்க்கு அது சென்றவழி நூலினிது செல்லுமென்பதே பொருளாகலின் அதற்கேற்பக் கொழூச்சென்றவழி யென்பது கொழுவானது சென்றவழியென எழுவாயாதலன்றிக் கொழுப்பின்கட்சென்ற வழியென ஏழாவதுருபேற்று விரிதலுங்கூடாது. கூடுமெனின், கொழுப்பிற் சென்றவழித்துன்னூசியினிது செல்லுமென உவமையை விரித்தாலொப்பப் பாயிரத்துட் சென்றவழி நூலினிது செல்லுமெனப் பொருளையும் விரித்தல்வேண்டும் அங்ஙனங்கொள்ளிற் பாயிரத்துள் நூல்செல்லல் கூடாமையின் அசம்பவமாம். அன்றியும் கொழுப்பிற் சென்ற

* இது அச்சேறும்போது மதுரைச் செந்தமிழிலும் வெளிவந்ததென்று காணப்பட்டது, இதனையொட்டியே ஸ்ரீமத். திரு. நாராயணையங்கார் அவர்கள் எழுதிய கொழூத்துன்னூசியின் பழைய வுரை மிகவும் கவனிக்கத்தக்கது. [ப-ர்.]

துன்னூசி இனிதுசெல்லல் அக்கொழுப்பிலோ பிறிதொன்றிலோ வென வினவின் விடை யின்மையு மறிக. இவ்வாற்றாற் கொழு வென்பது கொழுப்பை யுணர்த்துமெனக் கொண்டு கூறியவுரை முற்றும் பொருந்தாமை கண்டுகொள்க.

இனிக்கொழு உழுகொழுவென்றும் துன்னூசி கலப்பை யின் உறுப்பென்றுங் கூறிய பொருள் பொருந்தாமை முன்னரே விவேகபானுவில் வெளிவந்தது. உழுகொழுவுந் தையலூசியு மெனக் கூறிய பொருள் பொருந்தாமையும் ஸ்ரீமத். சோழகர் அநுவாதத்திற் கூறியபடி சோழவந்தான் ஸ்ரீமத் அ. சண்முகம் பிள்ளை அவர்கள் கொழுவையுந் துன்னூசியையும் ஒரு கருவியி னுள்ள இரண்டுறுப்பாகக் கொண்டிலரென்பதும், ஸ்ரீமத் அ. சண்முகம்பிள்ளை அவர்கள் கொழுவிற்குக் கொண்ட பொருள் செம்மார் தோற்கருவி செய்யும் காலைத் துன்னூசி நுழைதற்கு வழியாக்குங் கோலாகிய பிறிதொரு கருவியென்பதும், துன்னூசி தைக்குமூசியென்பதும் சென்ற தஞ்சைத் தமிழகத்திற் காணப்பட்டன.

இக்காலத்திற் செம்மாற் கொழுவைக் குத்தூசியெனவும் துன்னூசியைப் பின்னூசி தையலூசியென அடையொடும் ஊசியென அடையின்றியும் வழங்குகின்றனர். துன்னலுந் தைத்தலுமொரு பொருளவாயினாற் போல கொழுவலுங் குத்தலும் ஒரு பொருள் பயக்குஞ் சொற்களாம். குத்தற்றொழில் குற்றல் எனவும் வழங்கப்படுகிறது. குற்றலுந் தைத்தலுங் கூடிய வழியே செம்மார்வினை முடிவுறும். குற்றல்வினை செய்யுங் கருவியே கொழுவெனப்படும். தைத்தல்வினை செய்யுங் கருவியே துன்னூசி யெனப்படும். அத்தொழில்களுள் குற்றல்முன்னும் தைத்தல் பின்னுமாக நிகழும். இதனைக் "குற்றித்தைத்தீ, காலுக்குத் தோற் செருப்பில்லையென்பார்க்கும் கனகதண்டி, மேலுக்குப் பஞ்சணையில்லை யென்பார்க்கும் விதனமொன்றே," என்ற செய்யுளானு மறிக.

இவ்வாற்றாற் குத்தூசியும் தையலூசியுமெனக் கொண்ட பொருளே முன்னோர் கருத்தொடு முரணாது உவமைக்குப் பொருந்துவதாய முடிவுரையாம்.

மு. சாம்பசிவநாயனார்,
சாலியமங்கலம்.